**நாள்: 10.06.2026**
**O.S. No. 27/2022**

**வா.சா.1**
**பெயர்: அமிர்தலிங்கம், த/பெ. நைனான்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

இவ்வழக்கில் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் வழக்கறிஞர் படித்து சொன்னார். என் தகப்பனார், பிரதிவாதிகளின் தகப்பனார் ஆகியோருக்கு அனுபவத்தின் அடிப்படையில் அரசால் நத்தம் நில வரி திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனாருக்கு தாவா சொத்து எப்படி கிடைத்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் தாவா சொத்தை கிரயம் பெற்றாரா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு என் தகப்பனார் பெயரில் எவ்வாறு பட்டா ஏற்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு என் தகப்பனார் பெயரில் நான் பட்டா பெற்றேனா என்றால் இல்லை. என் தகப்பனாரே பட்டா பெற்றிருந்தார். நானும் பக்கத்தில் உள்ள பிரதிவாதிகள் மற்ற அருகாமையில் உள்ள அனைவரும் அரசு புறம் போக்கு இடத்தில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. என் பெயரில் பட்டா ஏற்பட்டுவிட்டது.

தாவா சொத்திற்கு நான் தான் முதல் முறையாக பதிவு ஆவணம் ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரிதான். உரிய மூல ஆவணங்கள் இன்றி நான் ஏற்படுத்திகொண்ட வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை

நான் அளவீடு செய்யும் போதே நான் ஏற்படுத்திகொண்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் பிரதிவாதிகளின் சொத்தை சேர்த்து பதிவு செய்து கொண்டதாக பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நில அளவையர் அளவீடு செய்த போதும் எனது செட்டில்மெண்ட் ஆவணத்தில் பிரதிவாதிகளின் சொத்தையும் சேரத்து பதிவு செய்து கொண்டதாக கூறினார் என்றால் சரியல்ல. எனது உரிமை மூலத்தை இந்த பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்த காரணத்தால் நான் விளம்புகை பரிகாரம் கோராமல் சுவாதீன பரிகாரம் மட்டும் கோர இயலாது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளான தாவா சொத்து தங்களின் தகப்பனாருக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என கட்சி செய்துள்ளதை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். ஆனால் உண்மையல்ல. தாவா கிராமத்தில் 26 நபர்களுக்கு 1972ல் அரசால் இலவச குடியிருப்பு பட்டா வழங்கபட்டது என்றாலும் அதில் என் தகப்பனாரும் ஒருவர் என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் தந்தை பெயர் வைத்திலிங்கம் என்றால் சரிதான். மேற்படி வைத்திலிங்கத்திற்கு புலஎண்.257/1M ல் 3 சென்ட் அரசால் வழங்கபட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. புலஎண்.257/1L ல் 2 சென்ட் சொத்தானது காளி என்பவருக்கு அசரால் வழங்கபட்டு அதனை 1ம் பிரதிவாதியின் தந்தை நாகூரான் கிரயம் பெற்று தற்போது 1ம் பிரதிவாதியால் அனுபவம் செய்யப்பட்டு வரப்படுகிறது என்றால் அது குறித்து தெரியாது. புலஎண்.257/1N ல் 3 சென்ட் என் தகப்பனாரான ராமன் மகன் நைனனுக்கு அரசால் வழங்கபட்டது என்றால் என் தகப்பனார்

சொல்லி தெரியும். என் தகப்பனாருக்கு அரசால் வழங்கபட்ட 3 சென்டை பொறுத்து மட்டும் தான் நான் பரிகாரம் கோர முடியும் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் 203 சதுர மீட்டர்(2185 ச.அடி) க்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு பாத்தியப்பட்ட 3 சென்ட்க்கு ஈடான 1308 சதுரடிக்கு தான் நான் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திருக்கவேண்டும் என்றாலும் அதற்கு கூடுதலாக 900 சதுரடி சேர்த்து பதிவு செய்து கொண்டுள்ள வகையில் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் இந்த பிரதிவாதிகளை கட்டுபடுத்த கூடியதல்ல என்றால் சரியல்ல. மேற்படி கூடுதல் விஸ்தீரணத்திற்கு அனுபவம் இல்லாமல் வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்திகொண்டது இந்த பிரதிவாதிகளை கட்டுபடுத்த கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் செல்லதக்கதல்ல என்றாலும் அதன் அடிப்படையில் இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் என் குடியிருப்புக்கு கீழ் புறம் பிரதிவாதிகள் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வசித்து வந்த குடியிருப்பிலேதான் அவர்களின் பெற்றோர்களும் வசித்துவந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு என்ன வயது என்றால் 44 வயதாகிறது. எனக்கு தெரிந்து 44 ஆண்டுகளாக பிரதிவாதிகள் அதே இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள். என் வீட்டிற்கும் பிரதிவாதிகள் வீட்டிற்கும் இடையே உள்ள வேலி யாருடையது என்றால் பிரதிவாதிகளுடையது. அவர்கள் மேற்கு புறம் நகர்த்தி வருகிறார்கள். மேற்படி வேலி என்ன தன்மையுடையது என்றால் முள் வேலியாகும். மேற்படி முள் வேலியில் உயிர் மரங்கள் உள்ளதா என்றால் ஆடா தொடை மற்றும் காட்டாமணி

உள்ளது. நான் கூறும் முள் வேலி என்பது மேற்படி உயிர் மரங்களை அனுசரித்து இணைத்து கட்டகூடியது என்றால் சரிதான். மேற்படி உயிர் மரங்கள் நகரும் தன்மையற்றவை என்றால் சரிதான். அவை மரங்களாக இல்லை. மக்கிபோன உடன் பிரதிவாதிகள் தள்ளி புதிதாக செடியை வைத்து நகர்த்தி வந்துள்ளார்கள். எனக்கு விரபம் தெரிந்த காலத்திலிருந்து மேற்படி வேலி இருந்து வருகிறதா என்றால் இருந்து வருகிறது. ஆனால் அதே இடத்தில் இல்லை. நகர்த்தி வருகிறார்கள். எனக்கு விபரம் தெரிந்த காலத்திலிருந்தே பிரதிவாதிகள் வேலியை நகர்த்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

20 ஆண்டுகளுக்கு முன்பே நாட்டாமை பஞ்சாயத்தார்களிடம் வேலி பிரச்சனையை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பிறகு 3 முறை பஞ்சாயத்தார்களிடம் சொன்னேன். அவ்வாறு பஞ்சாயத்திடம் சொல்லியும் பிரதிவாதிகள் வேலியை காலி செய்யவில்லை என்றால் சரிதான். எப்போதிலிருந்து வேலி பிரச்சனை இருந்து வருகிறது என்றால் என் தகப்பனார் இறந்த 25 ஆண்டுகளாக இந்த பிரச்சனை இருந்து வருகிறது. ஊர் பஞ்சாயத்திடம் இந்த பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை எனவும் கூறினார்கள் என்றால் கூறினார்கள். ஆனால் என் இடத்தை தான் ஆக்கிரமித்து இருந்து வருகிறார்கள். 25 ஆண்டுகளுக்கு முன்பே ஊர் பஞ்சாயத்துகாரர்கள் பிரதிவாதிகளை அழைத்து என் இடத்தில் உள்ள பிரதிவாதிகளின் வேலியை சரிசெய்து வைத்துகொள்ள என் முன்னிலையில் சொன்னார்கள் என்றால் சரிதான். 25 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாயத்தில் பேசியும் பிரதிவாதிகள் வேலியை சரிசெய்து கொள்ள முன் வராத நிலையில் நான் சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. என் தகப்பனார் அப்போது இறந்து விட்டார்.

என் குடும்பத்தில் நான் ஒருவன் மட்டுமே ஆண் வாரிசு. வேலியை பிரதிவாதிகள் கொஞ்சம் கொஞ்சமாக நகரத்திவந்து பிரச்சனை செய்தார்கள்.

பிரதிவாதிகளின் வேலி உயிர் மரப்போத்துகள் உள்ளவை என்பதால் நகரகூடியவை அல்ல என்றாலும் நான் கூறுவது போல அவ்வபோது வேலியை நகர்த்த இயலாது என்றால் சரியல்ல. உயிர் வேலியில் மரங்கள் எதுவும் இல்லை. காட்டாமணி குச்சுகளும் ஆடாதுடை குச்சுகளும் தான் உள்ளது. அவை மடிந்த உடன் புதிதாக குச்சுகளை வைத்து வேலி கட்டியுள்ளார்கள். பிரதிவாதிகள் வயதானவர் என்பதால் அவர்களுக்கு ஏமாற்றி வருவாய் துறையில் மோசடியாக கூடுதல் விஸ்தீரணத்திற்கு பட்டா பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கூடுதல் விஸ்தீரணத்திற்கு எனக்கு வழுங்கபட்டுள்ள பட்டாவை ரத்து செய்ய கோரி 2ம் பிரதிவாதி ராஜாங்கத்தால் வட்டாட்சியரிடம் மனு கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

என் தந்தைக்கு பாத்தியப்பட்ட பட்டாவின் அடிப்படையிலான சொத்தை தான் செட்டில்மெண்ட் ஆவணமாக நான் பதிவு செய்து கொண்டேன் என்றால் சரிதான். என் தந்தைக்கு பாத்தியப்பட்ட மூல பட்டாவில் கண்ட சொத்தை விட கூடுதல் விஸ்தீரணம் உள்ள சொத்தை பொறுத்து ஏற்படுத்தியுள்ள செட்டில்மெண்ட் மற்றும் என் பெயரில் ஏற்பட்ட பட்டா ஆகியவை இந்த பிரதிவாதிகளை கட்டுபடுத்த கூடியது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1972, 1988, 2003 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட கிராம வரைபடத்தை பார்வையிட்டால் பிரதிவாதிகள் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பது தெரியவரும் என்றால் அது குறித்து

எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு கொடுத்தேனா என்றால் முதலில் அவர்கள் கொடுத்தார்கள். பிறகு நான் கொடுத்தேன். தாவா வழக்கு மூலத்தில் என் தந்தைக்கு 31.12.1991ல் பட்டா வழங்கபட்டதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்யும் போது மூல ஆணங்கள் அடிப்படையில் தாவா சொத்தை அளவீடு செய்யாத காரணத்தால் மேற்படி அறிக்கையின் அடிப்படையிலும் இவ்வழக்கில் என்னால் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

//இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.06.10 18:33:21 +0530